**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

OS 160/2020

29.07.2025

**<u>வா.சா.2 ஆனந்தன் த/பெ. கோவிந்தராஜ் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபணபிரமாணபத்திரத்தில் சொல்லியுள்ள RCC வீடு கட்டியுள்ளது தொடர்பாக யார் பணம் கொடுத்தது யார் பொருட்கள் வாங்கியது என்று எனக்கு தெரியும். அதை என்னுடைய பிரமாணபத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். காவல்துறையினர் என்னை எப்போது எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று பிரமாணபத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி அனுப்பியுள்ள வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. சமரசம் எப்போது பேசப்பட்டது எங்கு வைத்து பேசப்பட்டது என்று பிரமாணபத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தின் அருகில் குடியிருந்து வருவதற்காக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வாதி பிரதிவாதியின் குடும்பவிபரங்கள் எதுவும் தெரியாது என்றும் 1ம் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நடைபெறாத சம்பவங்களை நடைபெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சார்பு நீதிபதி,
மன்னார்குடி.